

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முன்னாள் பொதுக் குழு உறுப்பினர் அ.மகாதேவன் 13வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே. ஆர்.பெரியகருப்பன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் அவரின் மகன் இளங்குமரன், மருமகள் சுதா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், பேரூர்க் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி,பேருராட்சி மன்ற துணைத்தலைவர் கான் முகமது அயலக அணி சன் சீமான் சுப்பையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் ஆயுஷ் கட்டமைப்பு மேம்பாட்டிற்கு

# கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

தென் சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்நாட்டில் ஆயுஷ் (AYUSH) கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி, ஆயுஷ் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.



அதாவது, தமிழ்நாட்டில் ஆயுஷ் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளதா? அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டு வாரியாகவும், மருத்துவமனை மற்றும் நிறுவன வாரியாகவும் ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

மேலும், ஆயுஷ் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகளை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? அதற்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய ஆயுஷ் துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) பிரதாப் ராவ் ஜாதவ் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டுள்ளதாவது:

தேசிய ஆயுஷ் இயக்கத்தின் (National Ayush Mission NAM) கீழ், தமிழ்நாடு அரசின் மாநில ஆண்டு செயல் திட்டங்களின் (SAAP) அடிப்படையில் ஆயுஷ் கட்டமைப்பு மேம்பாட்டிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2021-22ஆம் ஆண்டில் ரூ.5.97 கோடி, 2022-23ஆம் ஆண்டில் ரூ.17.94 கோடி, 2023-24ஆம் ஆண்டில் ரூ.40.87 கோடி, 202425ஆம் ஆண்டில் ரூ.100.21 கோடி மற்றும் 2025-26ஆம் ஆண்டில் ரூ.54.42 கோடி என மொத்தம் ரூ.219.41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆயுஷ் சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள், ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகளில் ஆயுஷ் பிரிவுகள், அரசு சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளின் மேம்பாடு, புதிய மருந்தகங்கள் உள்ளிட்ட திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

சென்னையில் செயல்படும் யுனானி மருத்துவ மண்டல ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (RRIUM) கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ரூ.54.22 கோடி நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சித்த மருத்துவ ஆராய்ச்சிக்காக மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (CCRS) சென்னை தலைமையகம், சென்னை சித்த மத்திய ஆராய்ச்சி நிறுவனம், பாளையங்கோட்டை சித்த மத்திய ஆராய்ச்சி அலகு மற்றும் மேட்டூர் சித்த மருத்துவ மூலிகைத் தோட்டம் ஆகியவற்றிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் தகவலின்படி, சென்னை இந்திய மருத்துவ முறைகள் இயக்கத்தில் (Indian Systems of Medicine) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு இதுவரை 132 ஆராய்ச்சி ஆய்வுகளை நிறைவு செய்து, 5 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளின் தரநிலைப்படுத்தல், மதிப்பீடு உள்ளிட்ட ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆயுர்வேதம், ஹோமியோபதி மற்றும் சித்த மருத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில், மத்திய அரசின் ஆராய்ச்சி அமைப்புகள் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஆரோக்கியக் கண்காட்சிகள், சுகாதார முகாம்கள், அறிவியல் வெளியீடுகள், சர்வதேச ஒத்துழைப்புகள், மருத்துவ ஆராய்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

சித்த மருத்துவ ஆராய்ச்சியை மேம்படுத்த மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (CCRS), 115 உள்துறை ஆராய்ச்சி திட்டங்கள், சித்த மருத்துவ மருந்துகளுக்கான தரநிலைகள் உருவாக்கம், 975 அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் வெளியீடு, பனை ஓலைச் சுவடிகள் டிஜிட்டல் பாதுகாப்பு, பல்வேறு தேசிய நிறுவனங்களுடன் 24 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், காசநோய் மற்றும் புற்றுநோய் தொடர்பான ஆராய்ச்சிகள், வர்ம சிகிச்சை ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஆயுஷ் இயக்கத்தின் கீழ் ஆயுஷ் மருத்துவ ஆராய்ச்சிக்காக தனியாக நிதி ஒதுக்கப்படவில்லை என்றும், யுனானி மற்றும் சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில்கள் மூலம் தேவையான நிதி வழங்கப்பட்டு வருவதாகவும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சித்த மருத்துவ ஆராய்ச்சிக்காக மத்திய ஆயுஷ் அமைச்சகத்திடமிருந்து ரூ.299.43 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளதுடன், ரூ.274.59 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – தோவாளை வடக்கு ஒன்றியம்

# அருமநல்லூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

குமரி, ஜூலை, 30-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை வடக்கு ஒன்றியம், அருமநல்லூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 28.07.2026, செவ்வாய்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் தோவாளை வடக்கு ஒன்றிய செயலாளர் மோ. பிராங்கிளின் தலைமையில் வீரவநல்லூர் பகுதியில் வைத்து நடைபெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம் பிள்ளை, ஒன்றிய பொருளாளர் T.கண்ணன், முன்னாள் ஞாலம் ஊராட்சி மன்றத் தலைவர் சதீஷ், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி எபி சாமுவேல், கழக நிர்வாகிகள் இளையபெருமாள், அனந்தம்பிள்ளை, சசி, சுந்தர், நாராயணன் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அருமநல்லூர் மற்றும் ஞாலம் ஊராட்சி பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் இயங்கி வந்த 4R ஊரக்கோணம் மற்றும் 4C அருமநல்லூர் "D" சர்வீஸ் பேருந்தானது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, அந்த இரண்டு பேருந்துகளின் இயக்கத்தை மீண்டும் துவக்கிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள நாகர்கோவில் அரசு போக்குவரத்து பொது மேலாளரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

அருமநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட வீரப்புலி ஊரில் சுமார் 200 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் பகுதி நேர நியாய விலைக் கடையானது தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எனவே, மாவட்ட ஆட்சியர் அவர்கள் பகுதி நேர நியாயவிலைக் கடைக்கு நிரந்தர கட்டிடம் அமைத்து தர தேவையான நடவடிக்கை எடுக்க இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப்பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தோவாளை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### பாகுபாடின்றி திருநங்கையர் - திருநம்பிகளின்

# கல்வி வாய்ப்பு தொடர்ந்து உறுதி செய்யப்படுகிறதா?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 29-

திருநங்கையர்/திருநம்பிகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் மற்றும் அடையாளச் சான்றிதழ்கள் வழங்குதல், சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் எம்.பி. டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அது வருமாறு:-

திருநங்கையர்/திருநம்பிகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் மற்றும் அடையாளச் சான்றிதழ்கள் வழங்குதல், சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் ஆகியவற்றில் அதன் தாக்கங்கள் யாவை?

திருத்தப்பட்ட கட்டமைப்பின் கீழ் மூன்றாம் பாலின அடையாளத்தைச் சான்றளித்தல் மற்றும் சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ளும் மருத்துவக் குழுக்கள் மற்றும் பிற அதிகார அமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விவரம் தருக?

திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னதாக திருநங்கையர்/திருநம்பிகள் சமூகங்கள், சிவில் சமூக அமைப்புகள், சட்ட நிபுணர்கள் மற்றும் மாநில அரசுகளுடன் நடத்தப்பட்ட கலந்தாய்வுகள் பற்றிய குறிப்புகள் தருக?

திருத்தப்பட்ட விதிகள் தொடர்பாகப் பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் சட்டரீதியான சவால்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை; என்ன!

திருநங்கையர்/திருநம்பிகள் பாகுபாடின்றி சமமான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு நன்மைகள், கல்வி வாய்ப்புகள் மற்றும் சுகாதார சேவைகளைத் தொடர்ந்து பெறுவதை உறுதி செய்ய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்?

அதறகு ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணைய மைச்சர் பி.எல். வர்மா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

திருநங்கையர்/திருநம்பிகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் ஆகியவை இணைப்புIல் கொடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி திருநங்கையர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

திருநங்கையர் என்பதற்கான வரையறையில் திருத்தம் மேற்கொள்ளுதல்;

மாவட்ட ஆட்சியரால் திருநங்கையர் அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்னதாக, மருத்துவக் குழுவின் மூலம் பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடு;

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களின் பிரதிநிதிகளாக 'இயக்குநர்' (Director) நிலைக்குக் குறையாத அதிகாரிகளை உள்ளடக்கும் வகையில், திருநங்கையருக்கான தேசியக் குழுவின் (National Council for Transgender Persons) அமைப்பு முறை திருத்தப்பட்டுள்ளது.

திருநங்கையருக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனைகளை அதிகரித்தல்.

அடையாளச் சான்றிதழ்கள் வழங்குதல், சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பெறுதல் ஆகியவற்றில் திருநங்கையர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2026ன் தாக்கங்கள் பின்வருமாறு:

தலைமை மருத்துவ அதிகாரி அல்லது துணைத் தலைமை மருத்துவ அதிகாரி தலைமையிலான மருத்துவக் குழுவின் பரிந்துரையை ஆய்வு செய்த பிறகு, மாவட்ட ஆட்சியர் திருநங்கையர் அடையாள அட்டை மற்றும் சான்றிதழை வழங்குவார். சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியரிடமே இருக்கும்; ஆனால், தகுதி இனி மருத்துவச் சரிபார்ப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

அடையாளச் சான்றிதழ் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தகுதியுள்ள திருநங்கையர் சட்டப்பூர்வ அங்கீகாரத்தைத் தொடர்ந்து பெறுவார்கள்; மேலும், பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்களின்படி, அச்சான்றிதழுடன் தொடர்புடைய நலத்திட்டங்கள் மற்றும் பிற சலுகைகளைப் பெறவும் இயலும்.

திருத்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அதிகார அமைப்பானது, தலைமை மருத்துவ அதிகாரி அல்லது துணைத் தலைமை மருத்துவ அதிகாரி தலைமையிலான மருத்துவக் குழுவைக் கொண்டுள்ளது.

மருத்துவக் குழு தனது பரிந்துரையை மாவட்ட ஆட்சியரிடம் (District Magistrate) வழங்கும்; அதனை ஆய்வு செய்த பின்னரே மாவட்ட ஆட்சியர் சான்றிதழ்களை வழங்குவார்.

கலந்தாய்வு மற்றும் கருத்துகளைப் பெறுதல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும்; மேலும், திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னதாக திருநங்கையர்/திருநம்பிகள் அடங்கிய குழுவினர் அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளைச் சந்தித்திருந்தனர்.

திருத்தப்பட்ட விதிகள் தொடர்பாகப் பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் சட்டரீதியான சவால்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை ஆகியவை இணைப்புIIல் கொடுக்கப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட விதிகள் தொடர்பாகப் பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் சட்டரீதியான சவால்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை ஆகியவை பின்வருமாறு:

இதன்படி பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் மற்றும் சட்டரீதியான சவால்கள் I தற்போதைய நிலை கீழ்வருமாறு:

W.P.(C) எண் 548/2026 லட்சுமி நாராயண் திரிபாதி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் (பின்வரும் வழக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது)।04.05.2026 தேதியிட்ட உத்தரவின்படி, உச்ச நீதிமன்றம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அறிவிப்புகளை (notices) அனுப்பியது; அவற்றுக்கான பதில்கள் 03.08.2026க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்திய ஒன்றியத்தின் சார்பில் வழக்கறிஞர் எம்.கே. மரோரியா அறிவிப்பைப் பெற்றுக் கொண்டார். பிரதிவாதி கள் அடுத்த விசாரணை தேதிக்கு முன்னதாகத் தங்கள் எதிர்பிரமாணப் பத்திரங்களை (counteraffidavits) தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், இவ்வழக்குகள் அடங்கிய தொகுப்பானது, இந்தியத் தலைமை நீதிபதியால் அமைக்கப்படவுள்ள மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன் விசாரணைக்கு வைக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

W.P.(C) எண் 512/2026 மனோஜ் நருலா எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

W.P.(C) எண் 519/2026 மன்வீர் யாதவ் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். ।

W.P.(C) எண் 535/2026 அக்காய் பத்மசாலி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

W.P.(C) எண் 548/2026 லட்சுமி நாராயண் திரிபாதி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர். ।

W.P.(C) எண் 541/2026 கின்னார் மா ஏக் சமாஜிக் சன்ஸ்தா அறக்கட்டளை எதிர் உள்துறை அமைச்சகம். W.P.(C) எண் 546/2026 ரச்சனா முத்ராபோயினா எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

W.P.(C) எண் 547/2026 ஆதர்ஷ் சோனி எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

W.P.(C) எண் 566/2026 அபார்திம் ராய் (எ) சுப்ரவா ராய் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

W.P.(C) எண் 568/2026 தங்ஜாம் சாண்டா சிங் (சாண்டா குரை என்றும் அழைக்கப்படுபவர்) எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்.

இவை இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

2. W.P.(C) 4620/2026 (PIL) லக்ஷய் ஜெயின் எதிர் இந்திய ஒன்றியம்; இது இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது:

W.P.(C) 4587/2026 டாக்டர் சந்திரேஷ் ஜெயின் எதிர் இந்திய ஒன்றியம்; இது டெல்லி உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

உச்ச நீதிமன்றம், வழக்கு மாற்றக் கோரும் மனுக்கள் (சிவில்) எண் 16861692/2026 (இந்திய ஒன்றியம் எதிர் நைபோர் சன்ஸ்தா மற்றும் பிறர்) மீதான 15.06.2026 தேதியிட்ட உத்தரவில், அம்மனுக்கள் மீது அறிவிப்பாணை (நோட்டீஸ்) பிறப்பித்த அதே வேளையில், "இதற்கிடையில், உயர் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ள மேல் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்" என்றும் உத்தரவிட்டுள்ளது. இவ்வழக்கு அடுத்த விசாரணைக்காக 03.08.2026 அன்று பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்தத் திருத்த சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு பெற்றதைப் போலவே, பாகுபாடின்றி சமமான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு நன்மைகள், கல்வி வாய்ப்புகள் மற்றும் சுகாதார சேவைகளைத் தொடர்ந்து பெறுவார்கள்.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.

### இந்தியாவின்

# ஏற்றுமதியை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான உத்திகளை வகுக்க, ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சில்கள் மற்றும் தொழில் சங்கங்களுடன் அரசாங்கம் சமீபத்தில் ஆலோசனைகளை நடத்தியுள்ளதா?



தமிழ்நாடு மாநிலத்திற்கு என பிரத்யேக துறை சார்ந்த ஏற்றுமதி வாய்ப்புகளை, குறிப்பாக ஜவுளி மற்றும் ஆடைகள், தோல் பொருட்கள், பொறியியல் பொருட்கள், ஆட்டோமொபைல் மற்றும் வாகன உதிரிபாகங்கள், மின்னணுவியல் (எலக்ட்ரானிக்ஸ்), கடல்சார் பொருட்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) ஆகியவற்றில் அரசாங்கம் கண்டறிந்துள்ளதா?

தமிழ்நாட்டில் உள்ள தொழில்துறைகளின் ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக ஏதேனும் புதிய ஏற்றுமதி வசதி நடவடிக்கைகள், தளவாடக் கட்டமைப்பு (logistics infrastructure), வர்த்தக நிதி உதவி, சந்தை பன்முகத் தன்மை முயற்சிகள் அல்லது மாவட்ட ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளனவா?

அவ்வாறு இருந்தால், அது குறித்த விவரங்கள் என்ன; மற்றும் துறைமுக இணைப்பு வசதியை மேம்படுத்தவும், தளவாடச் செலவுகளைக் குறைக்கவும், ஏற்றுமதி இணக்க நடைமுறைகளை எளிதாக்கவும், தமிழ்நாட்டின் முக்கிய தொழில்சார் மையங்களில் (industrial clusters) இருந்து ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், மற்றும் இந்தியாவின் ஏற்றுமதி இலக்குகளை அடைவதில் மாநிலத்தின் பங்களிப்பை அதிகரிக்கவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்று கேள்விக்கு

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் பதில் வருமாறு:-

முதல் இந்தியாவின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான உத்திகளை வகுக்கவும், துறை சார்ந்த வாய்ப்புகளைக் கண்டறியவும், வர்த்தகம் சார்ந்த பிரச்சினை களுக்குத் தீர்வு காணவும் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில்கள் (EPCs), தொழில் சங்கங்கள், மாநில அரசுகள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் அரசாங்கம் தொடர்ந்து ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகிறது என்று கூறினார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

## பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் மற்றும் வெங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், பள்ளிப்பாளையம் தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பி.யுவ ராஜ்**, (30, ஆலாம்பாளையம் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்) அவர்கள் பள்ளிப்பாளையம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

கபிலர்மலை தெற்கு ஒன்றியம், வெங்கரை பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **கா.தீபன்**, (123, மேற்கு தெரு, கொளக்காட்டுபுதூர் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் 637 208) அவர்கள் வெங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 600 018.
நாள்: 29.07.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.